2002 ஏப்ரல் 22] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கான கால அவகாசம் நீட்டித்து தனி அதிகாரிகளை நியமிப்பதற்கான சட்டம் இது.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆய்வு இல்லை இது.

திரு. வை. சிவபுண்ணியம்: ஆய்வு இல்லை. இப்போது தேர்தல் நடத்தியதாக சொல்லப்பட்டிருக்கிற கீரிப்பட்டி, பாப்பாபட்டியில், பாப்பாபட்டி ஊராட்சி மன்றத் தலைவர் இராஜினாமா

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2002 ஏப்ரல் 22

பண்ணிவிட்டார். இப்போது இருப்பதைப் போன்ற அர்த்தத்தோடுதான் இந்தச் சட்டத்திலே வந்திருக்கிறது. அதனால் தேர்தல் நடத்துவதற்கான முயற்சியை எடுக்கிற அதே வேளையிலே அதை உறுதி செய்வதற்கான முயற்சியும் இல்லாதபோது வெறும் தனி அலுவலர்களைப் போட்டு நீட்டித்துக்கொண்டிருப்பது என்பது ஜனநாயக ரீதியான தேர்தல் நடத்தி உத்தரவாதப்படுத்துவதற்கான முயற்சியாக இல்லாமல் இருக்கிறது என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் எடுத்து தேர்தலை நடத்தியிருக்கிறது. அந்தத் தேர்தலை நடத்தி அதிலே ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடு) சந்தானம் சொல்லுங்கள்.

திரு. லா. சந்தானம்: தேர்தலை நடத்தி, தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டு உரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதும் உண்மைதான். இன்றைக்குக் குரல் கொடுக்கின்ற இவர்கள் கடந்த ஐந்து ஆண்டு காலமாக அங்கே தேர்தலை நடத்தி ஒரு வேட்பாளரை நிறுத்துவதற்குக்கூட முடியாத நிலை இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு என்ன பதில் சொல்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு அவர்கள் தெரிவிக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) என்ன துரைமுருகன்?

*** திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரியும். இந்த மன்றத்திலே ஒரு மசோதாவை அறிமுகம் செய்கிறபோது அதை நாங்கள் எதிர்க்கிறோம், ஏன் எதிர்க்கிறோம் என்று இரண்டு வரிகளிலே காரணங்களைச் சொல்லலாம். ஆனால், இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்திருக்கின்றார்கள். அதன்மீது இப்போது விவாதம் அல்ல. ஆனால், இருவரும் விவாதத்தை நடத்துகிறார்கள், அதை அனுமதிப்பது இந்த மரபுக்கு உகந்தது அல்ல என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், அவ்வளவுதான்.

2002 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சியின் சார்பாக ஒரு கருத்தைச்சொல்கிறார், அவ்வளவுதான்.

திரு. துரைமுருகன்: கருத்து accept-ஆ இல்லையா என்றுதான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம்....

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS